Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.III. TIRUPATTUR
Case No. **CC.NO. 303/2022**
**DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No. 6 Page.No.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. முனிரத்தினம் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. கோவிந்தராஜ் | தொழில் | காவல் உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| ஊர் | திருப்பத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 62 |

| | |
|---|---|
| எதிரிகள் ஆஜர் | 1,2 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 7th day of August 2025.
**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை.-</u>**

நான் தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணியாற்றி தற்போது ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 27.05.2022 அன்று நான் நாட்றம்பள்ளி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது சுண்டம்பட்டி கிராமத்தை சேரந்த பெருமாள் கவுண்டர் மகன் சுப்பிரமணி என்பவர் நாட்றமப்ள்ளி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக தகவல் கிடைத்து அவரது புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து அதன் அடிப்படையில் நிலைய குற்ற எண். 158/2022 இதச பிரிவுகள் 294(பி),323,506(1) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **( அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது )** வழக்கினை விசாரணைக்கு எடுதது கொண்ட நான் 27.05.2022 அன்று காலை 10.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் மூர்த்தி, கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **( அவை முறையே அ.சா.ஆ 5, 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது )** பின்னர் இவ்வழக்கு சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும், இவ்வழக்கு எதிரியை 29.05.2022 அன்று காலை

10.00 மணிக்கு பச்சூர் பேருந்து நிறுத்தம் அருகே வைத்து காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் காயம் பட்ட அச.ா1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரணை செய்து காயச்சான்றும், வாக்குமூலமும் பெற்றேன். அசா1 க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்றளிக்கப்பட்டதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவை 323 லிருந்து 325 ஆக மாற்றம் செய்து பிரிவு மாற்றல் அறிக்கை தயார் செய்தேன். ( **அந்த பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் எனது விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 325,506(2) ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

சம்பவயிடம் யாருக்கு சொந்தமானது என்றால் எனக்கு தெரியாது. 26.05.2022 அன்று இரவு எனக்கு தகவல் கிடைத்தது. 27.05.2022 அன்று காலை 09.00 மணிக்கு நாட்றம்பள்ளி மருத்துவமனையில் வைத்து புகார் வாக்குமூலம் பெற்றேன். நாட்றம்பள்ளி மருத்துவமனைக்கும், காவல் நிலையத்திற்கும் சுமார் அரை கிலோமீட்டர் தூரம் இருக்கும். அதே தேதியில் தான் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் சரிதான். நாட்றம்பள்ளி அரசு மருத்துமனைக்கும் சாட்சிகளின் வீட்டிற்கும் சுமார் 5 கிமீ தொலைவு இருக்கும். 25.05.2022 அன்று இரு தரப்பினருக்கும் சண்டை நடந்ததாக தெரிவித்துள்ள நிலையில் அதற்கு தனியாக புகார் வாக்குமூலம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. 25.05.2022 அன்று நடந்த சம்பவத்திற்கு ஏன் புகார் அளிக்கவில்லை என்று நான் விசாரித்தேனா என்றால் அவர்கள் புகார் அளிக்காததால் நான் விசாரிக்கவில்லை. 25.05.2022 அன்று வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் இடத்தை அளந்தபோது பிரச்சனை நடந்தாக புகாரில் குறிப்பிட்டுள்ள நிலையில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளரை நான் விசாரித்தேனா என்றால் இல்லை. அ.சா1 க்கு எடுக்கப்பட்ட நுண்கதிர் படத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் கூறுவது போல் 26.05.2022 அன்று சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், 25.05.2022 அன்று வாய் தகராறு ஏற்பட்டபோதே பிரச்சனை முடிந்து விட்டது

என்றாலும், நடக்காத சம்பவத்தை நடந்ததாக தெரிவித்த அ.சா1 பொய் புகார் அளித்துள்ளார் என்றாலும், அதை நான் சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் சம்பவசமயத்தில் எங்கு இருந்தார்கள் என்று விசாரித்தேன் என்றால் சரிதான். எதிரிகள் சம்பவயிடத்தில் தான் சம்பவசமயத்தில் இருந்தார்கள். எதிரிகள் ஒசூரில் வேலை செய்வதால் சம்பவசமயத்தில் அங்கு இருந்தார்கள் என்றாலும், சம்பவயிடத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. நான் கூறுவதுபோல் 27.05.2022 அன்றே புகார் வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, பார்வை மகசர், மாதிரிவரைபடம் தயார் செய்து சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ய வாய்ப்பில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்திற்கும் பேருந்து நிலையத்திற்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் 500 மீ தொலைவு இருக்கும். பேருந்து நிலையத்தில் இருந்து மருத்துமனையானது 500 மீ தொலைவு உள்ளது.

| |
|---|
| Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.<br><br>Signature of Witness          Judicial Magistrate No.III (FAC)<br>Tirupathur. |